சமூக நீதிக்குப் புறம்பான செய்கை

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 15உ செவ்வாய் (31—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 16உ புதன் (1—9—54) | இதழ்: 67

காமராசர் ஆட்சி மக்கள் நலம் கருதும் ஆட்சி என்றால்.....

கண்ணீர் வடிப்போருக்கு நஷ்ட ஈடு தர வேண்டும்!

வழக்குகளை உடனடியாக வாபஸ் பெறுவது அவசியம்!

கல்லக்குடியில் பொதுச்செயலாளர்

"ஆச்சாரியார் போய், காமராசர் வந்திருக்கிறார் அவர் ஆட்சியில், மக்களின் குரலுக்கு மதிப்புண்டு என்கிறார்கள். உண்மையிலேயே காமராசர் சர்க்கார் மக்களின் நலன் கருதும் சர்க்காரானால், தனது முதன் மந்திரிபீடத்தில் முன்பு உட்கார்ந்திருந்த ஆச்சாரியார் ஆட்சியின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு தங்கள் பிள்ளைகளைக் காவு கொடுத்துவிட்டு, கண்ணீர் வடிக்கும் குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். அந்தக் குடும்பங்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு தர வேண்டும்."

"காமராசர் ஆட்சி நல்ல ஆட்சி என்று வாயாரச் சொன்னால் மட்டும் போதாது; இதைக் காமராசர் ஆட்சி செய்யாதவரை, 'ஒரு நல்ல ஆட்சி' என்று இதை, நாங்கள் கொள்ள முடியாது— ஆச்சாரியார் ஆட்சி போய் மற்றொரு ஆட்சி வந்தது என்று மட்டும் தான் நாங்கள் எண்ண முடியும்!"

"தூத்துக்குடி, கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்குவதுடன், உயிரிழந்த தோழர்தம் குடும்பத்தாருக்கு தகுந்த நஷ்டஈடு தரவும் உடனடியாக ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்தாகவேண்டும்."

—இவ்வாறு, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 29—8—54-ல், கல்லக்குடி தி. மு. கழக ஆண்டு விழாவில் ஆற்றிய சிறப்புரையில் குறிப்பிட்டார்.

பிரெஞ்சிந்தியா

செப். 2-ல் முக்கிய அறிவிப்பு?

பிரெஞ்சிந்தியத் திட்டுக்களின் எதிர்காலம் பற்றி பாரிஸ், டில்லி சர்க்கார்களிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலம் பற்றி முக்கியமானதோர் அறிவிப்பு ஒன்று செப்டம்பர் 2-ந் தேதியன்று வெளியாகும் என்று விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

தென் திருவாங்கூரில் போலீஸ் படை வாபஸ்

திருவனந்தபுரம், ஆக. 30— திரு—கொச்சி சர்க்காரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

"தென் திருவாங்கூர் பகுதியில், பஸ் போக்குவரத்திற்கான பாதுகாப்பு போலீஸ்படை தவிர, கிளர்ச்சி நடைபெற்ற இடங்களிலிருந்த போலீஸ் கடமைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. ரிஸர்வ் போலீசார், முகாமிலேயே இருப்பார்கள். அப்பகுதியில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்ட பின்னர் அப்படையினர் திருப்பி அழைக்கப்படுவார்கள்."

கல்லக்குடிப் பிரச்சினை

இரண்டு மாதங்களில் — நல்ல முடிவு ஏற்படும்!

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"கல்லக்குடி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றிலே சிறந்ததோர் இடம் பெறலாகிவிட்டது; இந்த சிற்றூரில் கடந்த ஆண்டிலே தி மு கழகம் துவங்கிய "'டால்மியாபுரம்' என்ற புகை வண்டி நிலையப் பெயரை, 'கல்லக்குடி'யாக மாற்று" என்ற பெயர் மாற்றப் போராட்டமும், அந்தப் போராட்டத்தில் இந்த ஊர் மக்கள் காட்டிய போர்வீரமும் திராவிடர் இயக்க வரலாற்றில் நிச்சயமாகப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கல்லக்குடிப் போராட்டம் எத்தனை அமைதியாகவும், கண்ணியத்துடனும் நடைபெற்றது என்பதை நீங்கள் எல்லாம் கண்டீர்கள். அத்தனை அமைதியுடனும் கண்ணியத்துடனும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தோழர்கள் மீதுதான் ஆச்சாரியார் சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது; இருவர் உயிர் நீத்தனர்; ஜோசப் என்ற ஒரு தோழர் கரம் இழந்தார்!

இதே போன்ற தூத்துக்குடியிலும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நான்கு உயிர்களை பலி கொண்டார்கள்.

கல்லக்குடி என்று அச்சடித்த தாள்களை கழகத் தோழர்கள், டால்மியாபுரம் என்றிருந்த இடங்களிலெல்லாம் ஒட்டியுள்ளார்கள்; இப்படி நாங்கள் செய்ததினால் யாருக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது?

இந்த ஊர் பொதுமக்கள்,

(4-ம் பக்கம் பார்க்க)

திருச்சி, ஆக. 30— கல்லக்குடி தி. மு. கழக முதல் ஆண்டு விழா நேற்று மாலை 6 மணி அளவில் துவங்கிற்று.

கூட்டத்திற்கு தோழர் அ. தம்புசாமி தலைமை தாங்கினார்.

தோழர்கள் அன்பில் தருமலிங்கம், அ. பொன்னம்பலனார், முசிறி ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசியதும், தி மு கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

பொதுச்செயலாளருக்கு பல்வேறு மன்றங்கள், சங்கங்கள், தி மு. கழகக் கிளைகள் ஆகியவற்றின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. கல்லக்குடி கழகத்தின் சார்பில் வரவேற்பு இதழ் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது.

கூட்டத்தில், கல்லக்குடியைச் சுற்றி உள்ள கிராம மக்களும், டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளப் பெருமக்களும், பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்தனர்.

டால்மியாபுரம், கல்லக்குடியாக முன்னேற்றக் கழகத்தால் மாற்றப்பட்டிருப்பது நியாயமே என்பதை நிரூபிப்பது போன்றி

பாங்கி அதிபர்களிடம் சர்க்கார் சரணடைந்தது

முகர்ஜியின் குற்றச்சாட்டு

பாங்கி தீர்ப்பு மாற்றம் — கண்டிக்கப்படுகிறது

பாங்கி சிப்பந்திகள் பற்றி அப்பீல் டிரிபியூனல் அளித்த தீர்ப்பில், இந்திய சர்க்கார் செய்த மாற்றம் சர்க்காருக்குக் கடும் எதிர்ப்பை உண்டாக்கியது மட்டுமின்றி, இந்திய மந்திரி சபையிலும் பிளவை உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

★

"பாங்கி தீர்ப்புகளை மாற்றியமைக்க இந்திய சர்க்கார் முன்வந்தது, சமூக நீதிக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் மாறுபட்டதாகும்; இப்பிரச்சினையில் சர்க்காரைச் சேர்ந்தவர்களே எதிர்ப்பு முகாமில் இருக்கிறார்கள்; மந்திரி சபையிலேயே இதுபற்றி கருத்து வேற்றுமை காணப்படுகிறது என்று கூறலாம்; தங்களுடைய முடிவை ஆதரிக்க சர்க்கார் சமர்ப்பித்திருக்கும் அறிக்கை மிகவும் வெட்கக்கேடானதாகும்."

"மேற்கு வங்கத்தில், பாங்கி அதிபர்கள், பாங்கியின் வாடிக்கைக்காரர்களின் பணத்தின்மீது எப்படி சூதாடினார்கள் என்பதை மேற்கு வங்காள பாங்கிகள் விசாரணைக் கமிட்டியின் அறிக்கையை நிதி அமைச்சர் படித்துப் பார்க்க வேண்டுமெனக் கோருகிறேன்; பாங்கி முதலாளிகளின் கோரிக்கைகள் அனைத்திற்கும் சர்க்கார் பணிந்து அவர்களிடம் சரண் அடைந்துவிட்டது!"

—இவ்வாறு, பாங்கி டிரிப்யூனல் தீர்ப்பு பற்றி, மக்கள் சபையில், 30—8—54-ல் நடைபெற்ற 2½ மணி நேர விவாதத்தின் போது பேசுகையில், ஹிரன் முகர்ஜி சர்க்கார்மீது குற்றம் சாட்டினார்.

இவ்விவாதம் நடைபெற்ற போது ஏராளமான பாங்கி சிப்பந்திகள் பார்வையாளர் பகுதியில் கூடியிருந்தனர் என்று தெரிகிறது.

முகர்ஜி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"அப்பீல் டிரிபியூனல் எடுத்துக் காட்டியுள்ள பாங்கிகளின் 'ரிசர்வ்' நிதி பற்றி சர்க்கார் விசாரணை செய்ய வேண்டும்.

ஒரு பாங்கியினுடைய டைரக்டர் மாதம் ஒன்றுக்கு ரூ. 21,834 சம்பளமாகப் பெறுகிறார்! பாங்கிகளின் சம்பளம் கொடுக்கும் தகுதி பற்றி ஆராயும்போது, சர்க்கார், இதுபோன்ற நிலைமைகளையும் ஆராயவேண்டும்."

பொதுக்களை முன்னிட்டே பாங்கி அப்பீல் டிரிப்யூனல் தீர்ப்பு மாற்றப்பட்டது என்று, சர்க்கார் தரப்பில் விவாதத்திற்கு பதில் தரும் போது கூறப்பட்டது.

★

இந்திய மந்திரி சபையில் கருத்து வேற்றுமை

தொழிலாளர் அமைச்சர் கிரி ராஜினாமா

நேரு சர்க்காரின் முதலாளித்துவப் போக்கு வெளியாகிறது

தொழில் உறவு மசோதா தாமதப்படுவதின் ரகசியம்!

இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா அமைச்சர் கிரி தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

பாங்கித் தகராறு பற்றிய அப்பீல் டிரிபியூனலின் தீர்ப்பை மாற்றுவது பற்றி மந்திரி சபையுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் விளைவாகவே, கிரி, இராஜினாமா செய்தார் என்று தெரிகிறது.

ஒத்த அந்த மக்கள் காட்டிய தீர்மம்

கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிர் நீத்தவர்கட்கு நஷ்ட ஈடு தரக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறின.

பாங்கி பற்றிய தீர்ப்பை சர்க்கார் மாற்றிவிட்டால், நாட்டில் பல பாங்கிகள் மூடப்பட வேண்டி வரும் என்று நிதி அமைச்சர் கூறுவது பலருக்கு நினைவிருக்கலாம்.

அப்பீல் டிரிபியூனலின் தீர்ப்பை மாற்றக்கூடாது என்றும், மாற்றினால், சமரச முறையில் தொழிலாளர் வைத்துள்ள நம்பிக்கை நாசமாகும் என்றும் கிரி கருதினார் என்று தெரிகிறது.

இந்திய மந்திரி சபையுடன், கிரிக்கு, பல பிரச்சினைகளில் மாறுபட்ட எண்ணம் இருந்ததாகத் தெரிகிறது.

முதலாளிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தொழில்

(4-ம் பக்கம் பார்க்க)

கல்லக்குடி பற்றி அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இல்லை, இல்லை; எங்களுக்கு டால்மியாபுரம்தான் வேண்டும்; கல்லக்குடி வேண்டாம்,' என்றார்களா — ஏதேனும் மகஜர் மூலம்! அல்லது, 'டால்மியாபுரம்' என்று பெயர் [illegible], 'கல்லக்குடி' என்ற நாள் இருப்பதால், வழக்கம்போல வந்து போய்க் கொண்டிருந்த பிரயாணிகள் வராது போய்விட்டார்களா? இல்லையே!

அப்படி இருக்கும்போது, ஏன், அதிகாரபூர்வமாக 'கல்லக்குடி' என்று ஆக்கிவிடக் கூடாது?

இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள், மத்திய அரசாங்கம், மாநில ஆட்சியுடன் கலந்து பேசி, இதுபற்றி ஒரு நல்ல முடிவுக்கு வர இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வந்துள்ளது.

அந்த அளவுக்கு இந்த பெயர் மாற்றப் போராட்டத்தில் ஈடுபட்டு, வெற்றி கண்டுள்ள இந்த ஊர் மக்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட கழகத் தோழர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'இன்று டால்மியாபுரம் இல்லை; கல்லக்குடி தான் இருக்கிறது,' என்பதை நான் மீண்டும் மீண்டும் சொல்ல[illegible]தற்குக் காரணம், எங்கள் கீர்த்தி பற்றிப் பேசுவதற்கு அல்ல!

இந்தப் பெயர் மாற்றத்திற்காக, எங்கள் தோழர்கள் சிறை சென்றிருக்கிறார்கள்; அடிபடிக்கு ஆளானார்கள்; அப்பாவிப் பிரயோகத்திற்கும் பலியானார்கள்; என்றாலும், ஒரு துளியும் கழகத் தோழர்கள் பலாத்காரத்தை எண்ணம் கொள்ளவில்லை. ரயில் நிலையச் சொத்துக்களுக்கோ, அன்றி, ஏனைய பொது தனிச் சொத்துக்களுக்கோ எள்ளளவும் சேதம் இன்றி கழகத் தோழர்கள் அமைதியாக, கண்ணியத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

அவர்களின் கண்ணியத்தை பாராட்டுகிறேன். காரணம், அந்தக் கண்ணியம் தான் தி. மு. கழக வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

அந்தக் கண்ணியத்துடனேயே நமது தோழர்கள் மேலும், மேலும் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் கண்ணியத்தினின்றும் கழகத் தோழர்கள் என்றும் வழுவமாட்டார்கள் என்றும் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்."

'சீட்டோ'வை பிரிட்டிஷ் தொழிற் கட்சி எதிர்க்கிறது!

பிரிட்டனில் அமெரிக்க தளங்களுக்கு எதிர்ப்பு

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு கூட்ட யோசனை

'சீட்டோ' பற்றி பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் 53-வது பிரதிநிதிகள் மாநாட்டில் 10 தீர்மானங்கள் வர இருக்கின்றன.

செப்டம்பர் 27-ந் தேதியன்று நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில், பெவானுக்கும் அட்லிக்கும் இடையே கட்சியின் பொருளாளர் பதவிக்குப் பலத்த போட்டி இருக்குமென்று தெரிகிறது.

ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் திட்டத்திற்கும், தென் கிழக்காசிய ஒப்பந்தத்திற்கும் பலத்த எதிர்ப்பு காணப்படுமென்று தெரிகிறது. தொழிற் கட்சியின் முக்கிய மனிதரான பெவன் இந்த எதிர்ப்பு களைத் திரட்டி வருகிறாராம்.

செப்டம்பர் 9-ந் தேதியன்று மணிலாவில் கூட்டப்படும் தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தம் பற்றிப் பேச இருக்கிறார்கள். இந்தப் பிரச்னை பற்றி தொழிற் கட்சி மாநாட்டில் 10 தீர்மானங்கள் வந்துள்ளன.

அதில் ஒரு தீர்மானம், சீனாவும், இந்தியாவும் இல்லாத அந்த தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தமும் பலன் அளிக்காது என்றும், அது, மேற்கத்திய [illegible] காலனிக் கொள்கையைப் பாதுகாக்கும் முயற்சியாகும் என்று கூறுகிறது.

சீனாவை உடனே ஐ. நா. சபையில் சேர்க்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் கோருகிறது.

தொழிற் கட்சியில் சில கிளைகள், பிரிட்டனில், அமெரிக்க விமான தளங்கள் இருப்பதை கண்டிக்கின்றன.

அத்துடன், பிரிட்டன், [illegible] காலனி நாடுகளுக்கு [illegible] [illegible] ஆசியப் பகுதி [illegible] [illegible] [illegible] பிரிட்டிஷ் தொழிற் கட்சி [illegible] மாநாட்டைப் பிரகடனம் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் கூறுகிறது.

காஷ்மீர் பிரச்னை

ஐ. நா. சபைப் செல்கிறது

பாக். சர்க்கார் முடிவு

பாகிஸ்தான் மந்திரி சபை காஷ்மீர் பிரச்சினையை மீண்டும் ஐ நா. பாதுகாப்புக் கவுன்சிலுக்குக் கொண்டு செல்வது என்று முடிவு செய்திருக்கிறதாம்.

அடுத்து வரும் நான்கு நாட்களுக்குள் அதிகாரபூர்வமான அறிக்கை வெளியாகும் என்று தெரிகிறது.

73 பேர் மரணம்

தேயிலைத் தோட்டங்கள் நாசமாகின்றன

ஜல்பைகுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கின் காரணமாய் 1000 [illegible] [illegible] தேயிலைத் தோட்டங்கள் நாசமடைந்தன [illegible] [illegible] லட்சம் [illegible] பெறுமானமுள்ள தேயிலை பயிர்கள் நாசமாயின என்று தெரிகிறது.

[illegible] அருகேயுள்ள 630 [illegible] [illegible] மக்கள் [illegible] நாசமாயின என்று தெரிகிறது.

இத் [illegible] மட்டும் வெள்ளம் [illegible] 73 [illegible] போனார்கள் என்று தெரிகிறது.

இந்திய [illegible] [illegible] [illegible] 9 [illegible] [illegible] தோட்டங்களுக்கு [illegible] னையும், நிவாரணமும் தேவைப்படுகிறது என்று கூறியுள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

கொடாச்சேரி

காந்தி பூங்காவில்

2—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. கே. நீலமேகம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

★

நாகப்பட்டினம்

அவுரித் திடலில்

3—9—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

கே. கே. நீலமேகம்

சொற் பயிற்சிக் கூட்டம்

1—9—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி மு கழகச் சார்பில் 'தோற்றமும் வளர்ச்சியும்' எனும் பொருள் பற்றி தோழர் சி. டி. மகிமானந் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

திருத்துறைப்பூண்டி தாலுக்கா தி. மு. கழக செயலாளர்களுக்கு

2—9—54 காலை 11 மணிக்கு திருத்துறைப்பூண்டி தாலுக்கா தி. மு. கழகத்தின் இரண்டாவது வட்டச் செயற்குழுக் கூட்டம் திருத்துறைப்பூண்டி கவுனிக் கடைத் தெருவிலிருக்கும் கழகக் காரியாலயத்தில் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெறும். அதுபோது வட்டச் செயற்குழுச் சார்பில் மாநாடு கூட்டுவது பற்றியும், மற்றும் பல விஷயங்கள் குறித்தும் பேசப்படும்.

சேலம் அம்மாப்பேட்டை தி.மு.க. உறுப்பினர்கட்கு

2—9—54 காலை 8 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை தி மு கழக செயற்குழுக் கூட்டமும், அங்கத்தினர்கள் கூட்டமும் நடைபெறும். அதுசமயம் ஆண்டு விழா நிகழ்ச்சி குறித்தும் மற்றும் பல விஷயங்கள் குறித்தும் யோசிக்கப்படும்.

தோழர் இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

2—9—54 : கும்பகோணம்

3—9—54 : திருச்சி-பொன்மலை

4—9—54 : தஞ்சை

5—9—54 : மாயவரம்

6—9—54 : பட்டுக்கோட்டை

எம். ஆர். இராதா நாடகத்திற்குத் தடை!

இராமாயணத்தின் மீது புதிய ஆட்சியாளரின் அன்பு!

சென்னை, ஆக 28—

தோழர் எம். ஆர். இராதா அவர்கள் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடத்த இருந்த "இராமாயணம்" என்னும் நாடகத்திற்கு சென்னை சர்க்கார் தடை விதித்திருக்கின்றனர்.

நாடகம் நடக்கப்படுவதற்கு சில மணி நேரங்கள் முன்னதாக தடை உத்தரவு தரப்பட்டது.

'நாடகம் தடை செய்வதற்கு காரணம், ஆபாசமான வகையிலும், அவதூறாகவும் இருப்பதால்,' என்று தடை உத்தரவில் கூறப்பட்டுள்ளதாம்!

முன்னணி வீரர்கள் முழக்கம்

காஞ்சியில், 21—8—54-ல் நடைபெற்ற கழக சீர்திருத்த மாநாட்டில், கழகத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றிய விவரங்கள் சில, முன்பே இதழில் தரப்பட்டுள்ளன; மற்றவை இங்கு தரப்படுகிறது:—

கண்ணதாசன்

"கம்பன் செய்த வம்பு" என்ற தலைப்பில், பேசியதாவது:—

"சங்க இலக்கியங்களுக்கு இல்லாத பெருமையும் புகழும் கம்ப இராமாயணத்திற்கு இருப்பானேன்? வள்ளுவருக்கு இல்லாத விழா கம்பருக்கு நடத்தப்படுவானேன்" — என்பதை தோழர் கண்ணதாசன் அவர்கள் விளக்கி விட்டு, 'கம்பனின் கவிதை சுவை நிறைந்தது, கற்பனை நிறைந்தது என்பதையும் கம்பனைப் புலவன், கவிஞன், போற்றுகின்ற,' என்று கூறுவோருக்கு மறுப்புக் கூறும் வகையில், கம்பனின் கற்பனைத் திறனையும், மிஞ்சிய கவிதை கண்ணிலைத்துப் பிறக்கும் ஆற்றலையும் விளக்கியும், கம்பன் வகுத்த இலக்கணத்தையும், வள்ளுவன் தந்த விளக்கத்தையும் எடுத்துக்காட்டி, கம்பன் கருத்துக்கள் அவனது காவியம் எப்படி இந்த நாட்டவரின் வாழ்வைப் பாழ்படுத்தியது என்று எடுத்துக் காட்டினார்.

அடுத்து பள்ளிச் சாமி பாரதி பேசிய பேச்சு சுருக்கமாகத் தரப்பட்டிருந்தது.

அன்பழகன்

"மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் பேசுகையில், மேலை நாட்டினில் அறிவுத் துறையில் விஞ்ஞானத் துறையில், இலக்கிய துறையில், பொருளாதார அரசியல் துறையில் எல்லாம் மறுமலர்ச்சி, எந்தெந்தக் காலத்தில் எப்படி எல்லாம் தோன்றின, அந்த மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் யார், யார் என்பதை விளக்கிவிட்டு, இந்த நாட்டில் அந்தத் துறைகளில் எல்லாம் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டிய அவசியம் குறித்தும், திராவிடர் இயக்கம் எப்படி மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறது என்பதையும் விளக்கிப் பேசினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "வள்ளுவர் வகுத்த நெறி" என்ற தலைப்பில் பேசிக்கொண்டிருக்கையில் மழை பெய்ததின் காரணமாக தொடர்ந்து அவர் பேச இயலாது போய்விட்டது.

'பாரத ரத்னா'த்தின் அடுத்த சேவை!

மத நம்பிக்கையை வளர்ப்பதாம்!

ஆச்சாரியாரின் அறிவிப்பு

சென்னை, ஆக. 30—

சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற 'ராம பாதுகா பட்டாபிஷேகம்' என்ற நாடகம் ஒன்றில் பேசுகையில், முன்னாள் முதல் அமைச்சர் ஆச்சாரியார், 'மதத்தில் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதற்காக உழைக்கவேதான் இட்டம் போட்டுள்ளதாக'க் கூறினாராம்!

சமயாச்சாரியர்களின் சேவையைப் பாராட்டிய ஆச்சாரியார் மத சம்பந்தமான கூட்டங்களும் நாடகங்களும் [illegible] அதிகமாக நடக்கக் குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தனக்கு 'பாரத ரத்னா' என்ற கௌரவ பட்டம் அளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்து, இப்பட்டங்களை எல்லாம் பெயருடன் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்றும், தவிர்க்கப்பட்ட முறையிலோ, அல்லது உத்தியோக பூர்வமாகவோ, 'பாரத ரத்னா' என்ற பட்டத்துடன் தன்னை அழைக்கவேண்டாமென்றும் ஆச்சாரியார் கூறினார்.

ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம்

பிரெஞ்சு சட்ட சபை நிராகரித்தது!

பாரிஸ், ஆக. 30—

பிரெஞ்சு சட்ட சபை ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை, "அடுத்த பிரச்சினையைக் கவனிக்கலாம்," என்ற பிரேரபணை ஒன்றை நிறைவேற்றுவதின் மூலம் நிராகரித்து விட்டது.

பிரான்ஸ்சின் மாநாடு பற்றி எடுத்துக் கூறி, இப்பிரச்சினையை ஒத்திப்போட சில உறுப்பினர்கள் முயற்சித்தனர்; ஆனால் பலன் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

லஞ்சப் பேய் தகனம்

காங்கிரசார் ஆட்சியில் காங்கிரசார் செய்யும் வேலை!

நாகபுரி, ஆக. 28—

"இலஞ்ச ஊழல் [illegible] [illegible]" [illegible] கொடும்பாவி [illegible] இச்சகரில் பல பகுதிகளில் சென்று நாகபுரி பகுதி காங்கிரஸ் குழுத் தலைவர் திரு எம். டி. தம்பாலியாரால் கொளுத்தப்பட்டது.

சிட்டின் பூங்காவில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்கத்தை தோற்றுவித்த திரு தம்பாலியார் பேசுகையில் இலஞ்ச ஊழலை மக்கள் ஒற்றுமை உணர்ச்சியுடன் எதிர்த்துப் போராட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மக்களைப் பிடித்துள்ள பேய்களையும், பேதிகளையும் உருவாக்கிச் செய்யப்பட்ட வேதாளங்கொம்புகளும் இவ்வூர் வழக்கப்படி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு முடிவில் கொளுத்தப்பட்டன.

இந்தியாவில், இவ்வாண்டில் சுமார் 5 லட்சம் டன் ரசாயன உரங்கள் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; 1953-ல் 4 23 லட்சம் டன்னும், 1952-ல் 2 76 டன்னும் செலவாயின.

சமூக நீதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறவு மசோதாவை சட்டமாக்குவதில் தாமதம் செய்வதை, கிரி ஒப்புக்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

தொழில் உறவு மசோதா முதலாளிகளின் [illegible] எதிர்ப்பின் பேரில் கைவிடப்படுகிறது என்று முன்னர் ஒரு செய்தி வெளியானதும், பின்னர் அந்த மசோதா சீக்கிரமே நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனது பதவியை இராஜினாமா செய்துவிட்ட கிரி அவர்களை, நேரு சர்க்கார் சமாதானப்படுத்த முனைகிறதாம்!

ராஜினாமாவை வாபஸ் பெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று தெரிகிறது.

இம் முயற்சி பலிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இராணிப் [illegible] கழகத் [illegible] தோழர் இரா. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை [illegible]